# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## THIRD YEAR EXAMINATIONS IN BACHELOR OF ARTS (EXTERNAL) 2009 / 2010 HELD IN DECEMBER - 2010

## TML 3.15 – MULTI – CULTURAL TRADITIONS IN THE TAMIL LITERATURE

எவையேனும் ஐந்து (05) வினாக்களுக்கு விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. “உலகப் பொதுமையான மானிட உணர்வுகளின் வெளிப்பாடாக சங்ககால அக, புற இலக்கியங்கள் அமைகின்றன.” இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

02. பட்டினப்பாலை முதலான சங்க நெடும் பாடல்களும் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காவியங்களும் அவை தோன்றிய காலத் தமிழக நகரங்களில் நிலவிய பன்முகப்பண்பாட்டுச் சூழலையும் சமூக நல்லிணக்கத்தையும் பிரதிபலிப்பனவாக அமையுமாற்றினைத் தெளிவுறுத்துக.

03. “பதினெண் கீழ்க்கணக்கில் அடங்கும் திருக்குறள், நாலடியார் ஆகிய அறஇலக்கியங்கள் குறித்த ஒரு சமயத்தவரால் இயற்றப்பட்டன என்று ஒருவேளை உறுதிப்படுத்தக் கூடியனவாய் இருப்பினும் அவை வலியுறுத்தும் அறங்கள் பெரும்பாலும் மதங்கடந்தவையாகவே காணப்படுகின்றன.” விளக்குக.

04. “மணிமேகலை காவியம், தான்தோன்றிய காலப்பகுதித் தமிழகத்தில் நிலவிய சமயங்களையும் அவற்றின் பிரதான கோட்பாடுகளையும் பற்றிய அடிப்படை அறிவினைத் தெளிவாகத் தருகிறது.” இக்கூற்றினை விளக்குக.

05. “பல்வேறு உணர்ச்சி பேதங்களை வெளிப்படுத்தும் ஆற்றல்கொண்ட நுட்பமான மொழியாகத் தமிழை வளப்படுத்தியதில் பெரும்பங்கு பக்தியிலக்கியங்களுக்கு உரியது.” விளக்குக.

06. இஸ்லாத்துக்கும் தமிழுக்குமிடையிலான ஊடாட்டத்தின் இயல்புகளைத் தெளிவுறுத்துக.

07. மேல்நாட்டார் வருகை தமிழின் எல்லைகளை நன்கு விரிவுபடுத்திற்று.” விளக்குக.

08. தமிழ் மொழியினதும் இலக்கியத்தினதும் நவீனமயப்பாடு நவீன சிந்தனைகளை வெகுஜனமயப்படுத்துவதற்கு வழிவகுத்தவாற்றைத் தெளிவுறுத்துக.

*****